கான்பெரா தமிழ்ச் சங்கம்
CANBERRA TAMIL ASSOCIATION
"தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்"

# சங்கச் சங்கதிகள்

பதிப்பு 2 – வைகாசி 2022

w: canberratamilassociation.org.au e: cta1983@hotmail.com

## தலைமைக் குறிப்பு

வணக்கம்!

எங்கள் ஆசிரியர் குழுமம், பரீட்சார்த்தமாகக் கொண்டுவந்த சங்கச் சங்கதிகள் முதல் மடலுக்கு நீங்கள் தந்த வரவேற்பு மிகவும் ஊக்கமளிப்பதாக இருந்தது. நன்றி! தொடர்ந்து உங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து, இந்த முயற்சியின் பயனை மேம்படுத்துங்கள்.

சில வாரங்களுக்கு முன் சங்கம் ஆலோசனை அரங்கம் ஒன்றை நடாத்தியது உங்களுக்கு ஞாபகம் இருக்கலாம். பல அங்கத்தவர்களும் நலன்விரும்பிகளும் இந்த ஆலோசனை அரங்கத்துக்கு வந்து பல தரப்பட்ட, ஏராளமான கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர். கலந்துரையாடல் ஆரோக்கியமானதாகவும் கருத்துக்கள் சிந்தனையைத் தூண்டுபவையாகவும் இருந்தன.

ஆலோசனை அரங்க அறிக்கை ஒன்றைத்தயாரித்து, அன்றைய தினம் வந்திருந்து தங்கள் பொன்னான நேரத்தை சங்க மேம்பாட்டுக்குத் தந்துதவிய பங்கேற்பாளர்களுக்கு நன்றி சொல்லும் விதமாக அனுப்பியிருந்தோம்.

இந்தத் தலைமைக் குறிப்பு மூலம், அன்றைய தினம் எங்களுடன் இணைய முடியாத அங்கத்தவர்களுடனும் நலன் விரும்பிகளுடனும் ஆலோசனை அரங்கத்தில் எடுக்கப்பட்ட முதன்மையான மூன்று முடிவுகளைப் பகிர்ந்து கொள்ளலாம் என்று எண்ணுகிறேன்.

பங்கேற்பாளர்களிடம், "சங்கத்திடமிருந்து நீங்கள் என்ன எதிர்பார்க்கிறீர்கள்?" என்று கேட்ட கேள்விக்கு வந்த ஏராளமான பதில்களைத் தொகுத்து, சுருக்கமாக வரிசைப் படுத்தி அவற்றை முன்னுரிமைப் படுத்தும்படி கேட்டபோது, பங்கேற்பாளர்கள் முன்னுரிமைப்படுத்திய மூன்று அம்சங்கள்...

1. அங்கத்தவர்களையும், கான்பரா வாழ் தமிழர்களையும் சங்கத்துடன் இணைக்க (கலாச்சார நிகழ்வுகளை முதன்மைப்படுத்தாமல்) சமூக நிகழ்வுகளை ஏற்பாடு செய்யுங்கள்.
2. நிதி திரட்டும் நிகழ்வுகளை சங்கத் தலைமையில் ஏற்பாடு செய்யுங்கள்.
3. சமூகத்தின் அனைத்துப் பிரிவினரும் அடிக்கடி சந்தித்து, பங்குபற்றி மகிழக்கூடிய நிகழ்வுகளை ஒழுங்கமையுங்கள்.

அன்றைய தினம் பங்குபற்ற முடியாதவர்கள் ஆலோசனை அரங்க அறிக்கையை சங்க இணையத் தளத்தில் காணலாம்.

ஆலோசனை அரங்கத்தில் பங்கேற்றவர்கள் தந்த ஆலோசனைகளை உங்கள் செயற்குழு அமுல்படுத்தத் தொடங்கிவிட்டது. நடப்பாண்டுச் செயற்குழுவால் அத்தனை ஆலோசனைகளையும் அமுல்படுத்த முடியாது என்பது நிதர்சனம் என்றாலும் இனி வரும் செயற்குழுக்களுக்கும் இந்த ஆலோசனை அரங்கத் தீர்ப்பு ஒரு வழிகாட்டலாக அமையும்.

சங்கச் செயற்குழுவின் தொலை நோக்குப் பார்வையும் இலக்கும் தெளிவாகவும் பிரகாசம் நிறைந்ததாகவுமே இருக்கிறது. அங்கத்தவர்களாகிய நீங்களும், நலன்விரும்பிகளாகிய அவர்களும் எங்களுடன் கைகோர்த்தால் மட்டுமே எங்கள் இலக்கை அடைவதை உறுதி செய்ய முடியும்.

எண்ணங்களைப் பகிர்ந்துகொள்ள எங்களைத் தொடர்புகொள்ள வேண்டிய மின்னஞ்சல் cta1983@hotmail.com.au!

ஜெயபாலசிங்கம்

## இனிவரும் நிகழ்வுகள்

**முள்ளிவாய்க்கால் நினைவு தினம்**
Wed, 18 May 6:30pm
St Benedict's Church Parish Hall
10 Tallara Pkwy, Narrabhundah

**Bunnings sausage sizzle (Fundraiser event)**
Sat, 21 May 8:30am – 4:30pm
Bunnings Tuggeranong
Anketell St, Greenway

**மனதுக்கினிய மாலை**
For CTA members to get together and have a chat over a cuppa with some games.
Sun, 13 June 3:30pm – 6:30pm
Tamil Senior Citizens Hall
11 Bromby St, Isaacs

**குத்து with கொத்து (Youth night)**
Sun, 19 June 6:30pm – 9:30pm
Venue: TBC

## கண்டு பிடியுங்கள் கண்டு பிடியுங்கள்! *(பதிப்பு 1)*

பதிப்பு 1ன் விடைகள் இங்கே உள்ளது:

*ஒவ்வொரு கேள்வியிலும் கீறிட்ட இடங்களை ஒரே எழுத்தால் நிரப்புக:*

1. தந்தம 2. கலகம் 3. அருவருப்பு
4. சச்சரவு 5. குங்குமம் 6. கட்டடம்
7. வடிவம் 8. சுடுகாடு 9. பயப்படு
10. கரகம் 11. பாகுபாடு 12. ரம்பம்

விடைகள் அனுப்பிய அனைவருக்கும் நன்றி. சரியான விடைகள் அனுப்பிய முதல் மூன்று நபர்கள்:

**திருமதி. சுசீலா கணேசசுந்தரம்**
**திருமதி. விமலா சிவலிங்கம்**
**திரு. ஜேக்கப் சுஜிவன்**

*இப்பதிப்பின் வினாக்கள் **மூன்றாம் பக்கத்தில்** உள்ளது.*

**DISCLAIMER:** *This newsletter is for informational purposes only. Content of the articles represent the views of the respective authors and the Canberra Tamil Association takes no responsibility for the accuracy of the information in the articles published in this newsletter.*



சித்திரைச் சந்திப்பு, 2022
நிகழ்வின் நிழல்கள்!

# தாயப் போர் - *யோகன்*

1971 ஜே.வி.பி கலவர காலத்தில் வட பகுதியில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டபோது பொழுது போக்குவதற்கு எந்த நவீன தொழிநுட்பங்களும் இருக்கவில்லை. தொலைக்காட்சிப் பெட்டியைக் கூட எவரும் கண்டதில்லை. கேட்பதற்கு வானொலி மட்டும்தான் இருந்தது. வீட்டுள் அடங்கி வெளியே போக முடியாததால் பொழுதைப் போக்க திண்ணையில் தாயக் கட்டங்களை வரைந்து நாலு பேர் கொண்ட குழுவாக விளையாடினோம். வேப்ப மரக் கொப்புகளிலிருந்து அல்லது பூவரசங் கதியால்களிலிருந்து வெட்டி எடுத்த இரண்டு தாயக் கட்டைகளை சீமெந்து நிலத்தில் தேய்த்து அழுத்தமாக்கி, கூர்க் கத்தியால் இலக்கம் வெட்டி, அதைப் பேனா மையினால் கீறினோம். சிலர் மான் கொம்பில் செய்த தாயக் கட்டையும் வைத்திருந்தனர். அவை சீமெந்து நிலத்தில் உருளும் போது கல கலத்து ஒலியெழுப்பின.

சொக்கட்டான், சோழி, பகடை போன்ற பெயர்களிலான ஆட்டங்களும் வெவ்வேறு ஆட்ட விதிகளுடன் ஈழத்திலும், தமிழ் நாட்டிலும், ஆடப்பட்டு வந்திருக்கின்றன.

நாங்கள் விளையாடிய தாய விளையாட்டில் தாயம் அல்லது இலக்கம் ஒன்று விழுந்து தோய்ந்த பிறகே மனையை விட்டு வெளியே வர முடியும். கிணற்றில் அள்ளித் தோய்ந்த பின் வீட்டை விட்டு புறப்படுவது போலத்தான். இதில் மனை என்று சொல்லுவது ஒவ்வொரு ஆட்டக்காரரும் தத்தமது காய்களை வைக்கும் நடுவிலுள்ள இடம்.



நால்வர் கொண்ட விளையாட்டில் எதிரெதிரே அமர்ந்திருக்கும் இருவர் ஒரு குழுவாகவும் அதில் ஒருவர் காய்களை பழுக்க வைப்பதும் மற்றவர் அவருக்கு வியூகங்கள் அமைத்துக் கொடுப்பதும் வழக்கம். பழுக்க வைப்பது என்பது இரண்டு எதிராளிகளின் மனைகளையும், கூட்டாளியின் மனையையும் கடந்து தனது மனைக்குள் சாதுரியமாக வந்து சேர்வது. ஒரு யுத்தத்தில் எதிராளிகளின் முற்றுகை, தடை வியூகங்கள் மற்றும் குறி வைத்து வெட்டி சாய்த்தல் போன்ற போர்க்களம் ஒன்றின் பிரதிபலிப்பே இது.

ஆறு காய்களை வைத்து விளையாடினால் இறுதியாகப் பழுக்கும் காயை ஆறாடி என்றழைக்கும் வழக்கம் இருந்தது. ஆறாடிக்கு எதிராளிகளின் தடைகளும் வெட்டி வீழ்த்தப்படும் சாத்தியமும் அதிகம். அதனால் அது இலகுவில் மனைக்கு வந்து சேராது. இதனாலேயே ஊர் சுற்றி விட்டு வீட்டுக்குப் பிந்தி வரும் எம்மைப் போன்றவர்களை 'ஆறாடி வருகுது' என்று கிண்டலாக வீட்டில் அழைப்பதுண்டு.

ஐந்து, சோனாலு, தாயம் விழுந்தால் மீண்டும் கட்டைகளை உருட்டும் வாய்ப்பு இருந்ததால் 'ஐந்து விழு', அல்லது 'சோனாலு விழு' என்று தாயக் கட்டைகளை அதட்டிக் கத்துவது விளையாட்டுக்கு கலகலப்பையும், உசாரையும் தந்தது.

அதட்ட விரும்பாதோர் தாயக் கட்டைகளிடம் கடன் கேட்பதுபோல கெஞ்சிக் கேட்டனர். ஆனால் மட்டமும் விழத்தான் செய்தது. மட்டம் என்பது இரு கட்டைகளிலும் எந்த இலக்கமும் இல்லாமல் பூஜ்ஜியம் விழுவது.

தாயக்கட்டையில் அமோகமாக விழுந்தால் அதை பெரு விருத்தம் என்று சொல்வார்கள். ஆட்டத்தின் கடைசியில் தாயக்கட்டையில் அமோகமாக விழுந்தால் பிற்கூத்து சிறக்கிறது என்றும் சொல்வார்கள். வெற்றிக்கு எதுவாக பிற்கூத்துதான் சிறக்க வேண்டும். அந்தக் காலத்தில் விடிய விடிய ஆடும் கூத்துகளிலும் பிற்பகுதியிலேயே நல்ல நடிகர்களின் ஆட்டங்கள் வருவதுண்டு. அதை வைத்தே முற்கூத்தை விட பிற்கூத்து சிறக்கும் என்ற சொல் வழக்கம் வந்திருக்க வேண்டும்.

தாய விளையாட்டு ஆண்கள், பெண்கள், சிறுவர் என்ற வேறுபாடில்லாமல் ஆடக்கூடிய ஒரு குடும்ப விளையாட்டு என்ற கணிப்பை பெற்றிருந்தது.

1980 களின் தொடக்கத்திலே மெல்லத் மெல்லத் தொலைக்காட்சி எங்கள் ஊரில் ஊடுருவியது. அதன் பிறகு குடும்பமாக தொலைக்காட்சித் திரையின் முன்னாள் அமர்ந்து பொழுதை போக்கும் காலம் வந்தது. பழைய தாய விளையாட்டு மெல்ல மெல்ல மறந்து போக ஆரம்பித்தது.

**குறிப்பு: தாயகத்தில் நாங்கள் வாழ்ந்து வந்த காலத்தை, எம் கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் தனித்துவமான அம்சங்களை சுருக்கமாகவும், சுவைபடவும் வெவ்வேறு தலைப்புக்களில் எழுத எம்மிடையே ஆர்வமுள்ளோர் சிலர் முன் வந்துள்ளனர். இப்படி எழுத ஆர்வமுள்ளோர் எம்முடன் தொடர்பு கொண்டால் அவற்றை இந்தப் பத்தியில் பிரசுரிக்க விரும்புகிறோம். அவை அரசியல் சாராத தலைப்புகளாக இருத்தல் அவசியம்.**

## கண்டு பிடியுங்கள் கண்டு பிடியுங்கள்!

நான்கு பேர்கள் இரவு நேரம் ஒரு பழுதடைந்த பாலத்தை கடக்க வேண்டும். அவர்களிடம் ஒரே ஒரு விளக்குத்தான் இருக்கிறது. அது பாலத்தை கடக்க கட்டாயம் தேவை. ஒரு நேரத்தில் இருவரை மட்டும்தான் அந்த பாலம் தாங்கும். நான்கு பேருக்கும் அந்தப் பாலத்தைக் கடக்க வெவ்வேறு நேரங்கள் வேறு எடுக்கும். ஒவ்வொருவரும் எடுக்கும் நேரங்கள் 1 நிமிடம், 2, 7, மற்றும் 10 நிமிடங்கள். எல்லோரும் கடந்து மறுபக்கம் செல்ல எடுக்கும் குறைந்த அளவு நேரம் எவ்வளவு? செய்முறையையும் காட்டுங்கள்.

உங்கள் பதில்களை cta1983@hotmail.com மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள். சரியான பதில்களை அனுப்பும் முதல் மூன்று நபர்களின் பெயர்கள் அடுத்த இதழில் வெளிவரும்.

## கவிதைப் பெட்டகத்தில் இருந்து... - ஆழியாள்

மஹாகவி உருத்திரமூர்த்தியின் **புள்ளி அளவில் ஒரு பூச்சி** 1962இல் வெளியானது.

காற்புள்ளி அளவான பூச்சி ஒன்றின் மறைவு கவிஞரின் மனஅமைதியைக் குலைத்துவிடுகிறது. அவரது பதைபதைப்பும், குற்றவுணர்வும், மன்னிப்புக்கோரலும் அச்சிற்றுயிரை முன்னிலைப்படுத்தியே எழுதப்பட்டிருக்கிறது - கவிஞராகிய 'தன்னையல்ல'- என்பது இக்கவிதையின் கவனிப்புக்குரிய அம்சம்.

'கூறிட்ட துண்டுக் கணத்துள்', 'மெய்பொய்யே' போன்ற சொற்கூட்டுகளும், உவமைகளும் கவிதையில் உள்ளர்த்த விரிவை நிகழ்த்துகின்றன.

இறுதியில் 'அப்பூச்சியின் கதையே' ஒரு பூச்சியாக மீண்டும், மீண்டும் மஹாகவியின் காதில் ரீங்கரித்து மோதும் படிமமாவது சிறப்பு. அது கவிஞரின் அற உணர்வை வெளிப்படுத்துவதாகவும் அமைகிறது.




## புள்ளி அளவில் ஒரு பூச்சி

புத்தகமும் நானும்
புலவன் எவனோதான்
செத்தபின்னும் ஏதேதோ சேதிகள் சொல்ல
மனம் ஒத்திருந்த வேளை!

ஒழுங்காக அச்சடித்த
வெள்ளைத்தாள் மீதில்,
வரியின் முடிவினிலே
பிள்ளைத் தனமாய்ப் பிசகாகப் போட்டகாற்
புள்ளியைக் கண்டு
புறங்கையால் தட்டினேன்-

நீ இறந்துவிட்டாய்!
நெருக்கென்ற தென்நெஞ்சு.

வாய் திறந்தாய், காணேன்,
வலியால் உலைவுற்றுத்
'தாயே!' என அழுத
சத்தமுமே கேட்கவில்லை.

கூறிட்ட துண்டுக் கணத்துள் கொலையுண்டு
ஓர் கீறாகத் தேய்ந்து கிடந்தாய்,
அக்கீறுமே
ஓரங்குலம் கூட ஓடி
இருக்கவில்லை.

காட்டெருமை காலடியிற்
பட்ட தளிர்போல,
நீட்டு ரயிலில்
எறும்பு நெரிந்தது போல்,
பூட்டாநம் வீட்டிற் பொருள்போல
நீ மறைந்தாய்

மீதியின்றி நின்னுடைய
மெய்பொய்யே ஆயிற்று
நீதியன்று நின்சா,
நினையாமல் நேர்ந்ததிது.
தீதை மறந்துவிட மாட்டாயோ
சிற்றுயிரே!

காதில் அப்பூச்சி கதை ஒன்றே வந்துவந்து
மோதிற்று!
மீண்டும் படிக்க முடியவில்லை.
பாதியிலே பக்கத்தை மூடிப்
படுத்துவிட்டேன்.

**-மஹாகவி உருத்திரமூர்த்தி-**

## தருணம் பார்த்து கருமம் ஆற்றல் - *யோகேஸ்வரி கணேசலிங்கம்*

'கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து'

மேற்கூறிய திருக்குறள் காலம் அறிதல் என்ற அதிகாரத்தில் உள்ளது. இக்குறள் 490ம் குறள் ஆகும். திருக்குறளில் சொல்லாத பொருளே இல்லை என்பதனை நாம் அறிவோம். இக்குறளில், தொழில் செய்யாத காலத்திலே கொக்கு இருப்பது போல் இருக்க வேண்டும். பின்னர் ஒரு தொழிலை நாம் மேற்கொள்ளும்போது கொக்கு தவறாது செய்து முடிப்பது போல் செய்து முடிக்க வேண்டும். கொக்கு நீர் நிலைகளில் ஒற்றை காலில் தூங்கியபடி நிற்கும். சரியான மீன் அதன் அருகே வரும்போது சந்தர்ப்பத்தை தவற விடாது அந்த மீனை சரியாக இலக்கு வைத்து குத்தி உணவாக்கி கொள்ளும்.

நாம் எக்காரியத்தை செய்யினும் சரியான காலம் வரும் வரை அமைதியாக இருந்தால் எமது எண்ணம் நிறைவேறி விடும். அடக்கமாக அமைதியாக இருப்பவர்கள் அறிவற்றவர்கள் அல்லர். இதையே மூதுரையில் ஔவைப்பிராட்டி,


*'அடக்கமுடையார் அறிவிலர் என்று எண்ணிக்*
*கடக்க கருதவும் வேண்டா-மடத்தலையில்*
*ஓடு மீன் ஓடி உறுமீன் வருமளவும்*
*வாடியிருக்குமாம் கொக்கு'*

என்று சொல்லியிருக்கிறார். எங்களுடைய வாழ்விலும் நாம் அடக்கமாயிருந்து சரியான சந்தர்ப்பங்களில் வாயைத் திறந்து சில காரியங்களைச் சாதித்துக் கொள்கிறோம். ஒரு தந்தையிடம் வேண்டிய ஒன்றைப் பெறுவதற்கோ, வேலைத்தலத்தில் மேலதிகாரியிடம் ஒரு தேவையை சொல்லவோ தருணம் பார்த்து நடக்க வேண்டும். பெரும் மன்னர்கள் பலர் தருணம் பாராமல் போருக்கு சென்று தோல்வியுற்ற வரலாறுகள் பல உள்ளன. பெரும் மன்னன் நெப்போலியன் பல போர்களில் வெற்றி பெற்றவன். இறுதிப் போரில் சரியான காலம் அறியாமல் போரிட்டு தோற்ற வரலாற்றை நாம் அறிவோம். இரு வரிகளில் வள்ளுவர் புகுத்திய கருத்து எமக்கு பெருமளவுக்கு சிந்தனையை தூண்டுவதாக இருக்கிறது.

# கறுத்தக் கொழும்பான்

***- அனிதா ஜெயசிங்கம்***

இன்று நான் உங்களுடன் பகிர இருக்கும் கதை 'கறுத்தக் கொழும்பான்'. அவுஸ்திரேலியாவில் வாழும் ஆசி கந்தராஜா எழுதிய கறுத்தக் கொழும்பான் என்ற சிறுகதைத் தொகுப்பின் ஒரு கதையே இது. தலைப்பைக் கேட்டதுமே உங்களைப் போலவே எனக்கும், உடன் துருவிய தேங்காய்ப்பூ போட்டு அவித்த புட்டுடன் சாப்பிட்ட கறுத்தக் கொழும்பான் மாம்பழம்தான் ஞாபகம் வந்தது. என்னதான் வெளிநாட்டில் பல வருடங்கள் வாழ்ந்தாலும் எங்கள் மண்வாசனையை சுமந்துவரும் ஆக்கங்களை வாசிக்கும்போது எங்களை அறியாமலே ஒரு நெகிழ்ச்சி ஏற்படுகிறது. 'உடையார் மாமா மகா விண்ணன்' என்று கதை ஆரம்பிக்கும் போது ஒரு புன்னகை வந்து இதழ்களில் ஒட்டிக்கொள்கிறது. தொடர்ந்து வரும் 'அடுகாணி-படுகாணி', 'பிரளி குழப்படி' போன்ற சொற்றொடர்களை வாசிக்கும்போது எங்கள் தமிழை நாம் விட்டுத் தூரப் போய்விட்டோமோ என்ற எண்ணமும் தோன்றுகிறது.




கறுத்தக் கொழும்பான் மரத்தை சிட்னியில் வளர்க்க வேண்டும் என்ற உடையார் மாமாவின் முயற்சிகளைப் பார்க்க எங்களுக்கும் அப்படி ஒரு ஆசை வருகிறது. கதை ஆசிரியர் ஒரு உயிரியல் தொழில்நுட்பத் துறையைச் சேர்ந்தவர் என்றபடியால், மாம்பழ விவசாயம், ஒரு தாவரத்தை அவுஸ்திரேலியாவுக்கு கொண்டு வருவதில் உள்ள கட்டுப்பாடுகள், கனிகளை வியாபாரப்படுத்தும் முறைகள் என கதை நகர்கிறது. அப்படியே டர்பனில் நடக்கும் சர்வதேச மாம்பழ மாநாட்டுக்கும் உடையார் மாமா செல்கிறார், எப்படியும் ஒரு கறுத்தக் கொழும்பான் மாங்கன்றைச் சிட்னிக்கு கொண்டுவந்துவிட வேண்டும் என்ற நோக்கில்.

ஆனால், அங்கு இந்திய வம்சாவளியைச் சேர்ந்த இளம் சந்ததியினரைச் சந்திக்க நேர்கிறது. தங்களின் மொழியும் சமயமும் தெரியாமல் வளரும் அவர்களைக் கண்டதும் அவரின் நோக்கமே மாறிவிட்டது. நாம் எங்கள் நாட்டில் இருந்து கொண்டு வரவேண்டியது மாங்கன்று அல்ல, எமது அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லவேண்டியது எங்கள் மொழியான தமிழை என்று உணர்கிறார்.

இக்கதையை வாசித்து முடித்தபோது எனக்கும் அந்த எண்ணம்தான் ஏற்பட்டது. ஊரில் இருக்கும் மரங்கள், அங்கு சாப்பிடும் சாப்பாடு, அங்கு வாழ்ந்த வாழ்க்கை முறைகள், இவற்றையை எல்லாம் இங்கு கொண்டுவர எண்ணும் நாங்கள் எமது இனத்தின் ஒரே அடையாளமான எமது மொழியை இங்கு பாதுகாக்கிறோமோ? எங்கள் பிள்ளைகளுக்கு எல்லாவற்றையும் சொல்லிக்கொடுக்கும் நாங்கள் தமிழை சொல்லிக் கொடுக்கிறோமோ?

# "Pan-Indian" படம் என்பது என்ன? - ***ராகவன் சிவபாலன்***

சமீபத்தில், தென்னிந்தியாவில் இருந்து வெளியான blockbuster படங்கள்,"pan-India" படங்கள் என்று கூறப்படுகின்றன. அப்படி என்றால் என்ன?
இந்திய சினிமாவைப் பொறுத்தவரை, ஒரு படம் ஒவ்வொரு பெரிய மார்க்கெட்டிலும் வெற்றிகரமாக ஓடினால், அது ஒரு "pan-India" படம் என கூறப்படும். "Pan" என்றால் "Presence Across Nation".
அதாவது வடநாட்டின் "பாலிவுட்", தமிழ்நாட்டின் "கொலிவுட்", ஆந்திராவின் "தொலிவுட்", கேரளாவின் "மொலிவுட்" மற்றும் கர்நாடகாவின் "சன்டல்வுட்"இல் சூப்பர் ஹிட் படமாக அமையும்.

பாகுபலியைத் தொடர்ந்து சமீபத்தில் தொலிவுட்டில் இருந்து வெளியான சுகுமாரின் "புஷ்பா" (2021), ராஜாமௌலியின் "RRR" (2022) மற்றும் சன்டல்வுட் படம் "KGF-2" (2022) போன்றவற்றை சொல்லலாம். இவற்றில் "RRR", மற்றும் "KGF -2" 1000 கோடி வசூல் சாதனையைப் படைத்து, இந்திய சினிமாவில் மூன்றாம் மற்றும் நாலாம் இடங்களில் இருக்கின்றன. பாலிவுடின் "டங்கள்" மற்றும் தொலிவுடின் "பாகுபலி-2" முதல் இரண்டு இடங்களில் இருக்கின்றன.

கொலிவுடில் இருந்து எப்ப இந்த மாதிரி படங்கள் வரும்? ஒரு காலத்தில் "பம்பாய்", "ஜீன்ஸ்", "இருவர்", "இந்தியன்", "எந்திரன்" போல் படங்களை வெளியிட்டு இந்தியாவே கொண்டாடிய கொலிவுட் எங்கே?
ரஜினிகாந்த் மற்றும் அக்ஷய் குமாரின் "2.0" படத்துக்கு பிறகு தமிழ்நாட்டில் இன்னும் அப்படி ஒரு படம் அமையவில்லை. ஆனால், கவலைப்படவேண்டாம்!

மணிரத்னத்தின் "பொன்னியின் செல்வன்" மிகப் பெரிய எதிர்பார்ப்புடன் இந்த வருடம் வரப்போகிறது. ஏ. ஆர். ரஹ்மான் இசையில், விக்ரம், கார்த்தி, ஜெயம் ரவி, த்ரிஷா, ஐஸ்வர்யா ராய் பச்சன், ஜெயராம், போன்ற மாபெரும் நடிகர்கள் இப்படத்தில் நடிக்கிறார்கள். இந்த காவிய படைப்பு இரு பாகங்களாய் வெளிவரவுள்ளது. இவற்றில் முதலாம் பாகம் புரட்டாசி மாதம் வெளியாகி மணிரத்னத்தின் கனவு நிறைவேறவுள்ளது.




ஒரு "pan-India" படமாக மட்டும் இல்லாமல், "Avengers" போல் ஒரு "pan-world" படமாக அமையும் என்று நம்புவோம்!

ஆனால் சிலர் இது ஒரு தப்பான வார்த்தை, எல்லாமே "இந்தியன்" படங்கள் என்று கருத்து கூறினார்கள்.

இதை பற்றி உங்கள் கருத்து என்ன?

பொன்னியின் செல்வன் கதையைப் பற்றி வாசிக்க பதிப்பு 1ல் திருமதி அனிதா ஜெயசிங்கத்தின் பக்கத்தை பாருங்கள்!

# பலகாரப்பந்தல்

## வைகாசி 2022




## Volunteering opportunities

**Bunnings sausage sizzle**

Our next sausage sizzle fundraiser will be happening at Bunnings Tuggeranong on the 21st of May. We would like volunteers to help out on the day. Please contact a CTA committee member if you would be able to assist for a couple of hours, or send us an email.

**ThendralFM Radio (91.1FM)**

ThendralFM continues to actively recruit radio hosts for our adult and youth programs.

Please get in contact with Raagavan Sivapalan on 0424 434 474 if you are interested in participating or would like further information.

**Your feedback is important to us!**

Please let us know your thoughts on this newsletter through either letting a contributor know or by emailing us at cta1983@hotmail.com

# Let's Talk Finance - *Rahulan Rukmanikanthan*



***Rahulan is a Canberra Tamil who has been working in the wealth management sector for over 10 years. We have reached out to Rahulan with a few questions which we believe the community will benefit from.***

***Please note the article was provided 29 April, 2022.***

**Vanakkam, how did you become interested in this field?**

**What did you study for this?**

Contributing a gold coin fortnightly into a Dollarmites account was probably my first step into the world of savings and finance. In high school, I liked studying maths and was curious about the world of finance. My Bachelor of Economics and Bachelor of Finance degrees at the Australian National University (ANU) prepared me for a role in the wealth management industry, helping people invest their savings / superannuation to meet their personal goals and objectives.

Since joining the sector, I have completed a Master of Applied Finance and fulfilled the adviser professional standards coming into effect in 2026. New entrants into the advice profession need to have an approved degree, complete a Professional Year (similar to a learner driving under supervision), and pass a national exam.

**For those who wish to join this field, what opportunities are there? What advice would you like to give to people entering the profession or who may want to pursue it?**

The wealth management profession is an exciting and dynamic space. Financial markets like the Australian share market can be complex and confusing. Advisers need to remain alert on domestic and world news and effectively communicate how this impacts client portfolios. The adviser role can be appealing for those who like to help people, as part of the role is to educate, empower and coach people to make informed decisions about their finances to help them achieve their goals. For example, one goal might be to generate annual portfolio income of $60,000.

Australians' superannuation assets totalled $3.4 trillion as at September 2021. Superannuation contributions are legislated to increase to 12.0% per annum by 2026, which will likely grow the pool of assets within superannuation. This may drive increased demand for financial advice and wealth management services.

Since 2015, registered advisers have fallen approximately 15%, due to the increased regulatory focus to improve educational standards and consumer confidence. The need for advice has not disappeared however and so it may be an opportune time to join the wealth management / financial advice professions.

Often the pathway to adviser involves providing support to an experienced adviser where crucial skills for a successful career can be mastered. The pathways to become an adviser are defined on the Treasury website (https://fas.treasury.gov.au/who-am-i/new-entrant). I would be happy to discuss further with those interested.

**Any advice on super funds for those who are approaching retirement?**

There are many different superannuation options available - industry super like AustralianSuper, retail super like Colonial First State, and Self-Managed Super Funds for those seeking greater control, flexibility and transparency. In some sectors like the public service, employees may be fortunate to have 'defined benefit' accounts, such as the CSS, PSS and some UniSuper accounts.

Defined benefit members need to make important decisions when starting to access their super. It is critical for them to make the appropriate choice at the time, as it cannot be reversed.

Superannuation is often the most tax effective structure because investment earnings can be taxed as little as 0% once a pension is commenced. Accumulation accounts (where a pension has not commenced) are taxed no more than 15% on investment earnings. Often this is favourable compared to investing in one's personal name.

While federal governments have changed superannuation rules over the last two decades, they have generally maintained the effectiveness and relative attraction of this structure.

Nonetheless, it is important to review your superannuation arrangements to select an option right for you, and to ensure you are making the appropriate contribution, withdrawal and investment decisions to optimise your outcomes. Sometimes leaving these decisions until retirement can be too late to gain meaningful benefits.

Younger people often overlook their superannuation because they cannot access it for many years, but selecting an appropriate investment option early can help to build their super balance over the longer term.

However superannuation is not the only way to invest and some clients are advised to invest in other entities as well, like personal names. A financial adviser can review your circumstances to ensure your settings are optimised for what you want to achieve. For those who do not know a financial adviser, Shaw and Partners have financial advisers who can assist.

**What will the economic impacts be post COVID-19? Any insights on investments and bank interest rates?**

Governments across the globe heavily reduced interest rates and injected money into markets as the COVID-19 global pandemic started in March 2020. This resulted in assets like shares and property growing substantially, as you may have noticed. This year, interest rates are expected to lift with the US Federal Reserve having raised already in March. Following strong inflation data for the first quarter of 2022, investment bank UBS predicts the Reserve Bank of Australia (RBA) to lift rates from 0.10% in May 2022.

The markets are predicting the official Australian cash rate to reach approximately 1.80% by 2022 end and 3.25% by 2023 end. However, UBS and the Commonwealth Bank of Australia (CBA) are predicting the interest rate to reach approximately 1.25% in 2023, partly due to the high indebtedness of Australians.

Interest rate rises will increase borrowing costs. As a result, banks may lend less, and this may limit their customers' spending on cars, property, etc. The Federal Election is an added uncertainty. While it remains to be seen how asset markets will react in coming years, the Australian Financial Review reported on 11 April that property prices in almost 40% of Sydney suburbs and almost 50% of Melbourne suburbs declined in the first quarter of 2022. The Canberra market may behave slightly differently due to the larger presence of the public service.

Another key issue impacting markets is the Ukraine invasion. Shaw and Partners research identifies Russia as a key supplier of several commodities such as oil (13% of global supply), gas (18%), palladium (40%) and wheat (11%). While the Australian share market (S&P ASX200) was down 10% at one point this year, it has now rebounded to be flat at time of writing on 29 April.

Sanctions have been introduced against Russia, which has reduced supply of some commodities. Commodity prices have surged as a result, and you may have felt this through higher fuel prices at the pump.

Australia is a large exporter of commodities like iron ore, lithium, gas and coal. A prolonged war will likely keep prices elevated for longer, and many Australian materials companies are set to benefit because they can sell their commodities at a higher price. BHP Group (ASX: BHP) is up 20.7% for the year and Woodside Petroleum (ASX: WPL) is up 47.5% for the year – just two examples of many Australian companies benefiting.

**Can you briefly explain a bit about crypto currencies such as bitcoin?**

Cryptocurrencies like Bitcoin and Ethereum launched as some people and organisations across the world wanted to hold assets outside the regulated banking system partly due to a lack of trust in the institutions, and the increased level of anonymity compared to holding currency at a bank.

Currencies like the US dollar or the Australian dollar have an underlying value which can be estimated based on market factors. For example, Australian dollars are required to buy the commodities Australia sells to the world, and given the increased demand for Australian commodities, the Australian dollar strengthened up to 4.3% against the US dollar at one point this year. There is some difficulty in deriving the underlying value of cryptocurrencies as they are not driven in the same way as hard currencies (interest rate differentials, economic growth, etc). Many people have made money through cryptocurrencies, but others have also made losses. To avoid nasty surprises, it is good to understand an investment before entering it.

**Nandri. What would you like to achieve in this field in the future?**

I like to help clients with their finances. I think I am fortunate to be in a role where I can help people and see the financial security and freedom it brings to their lives. The markets are not static and so I recognise this will be an ongoing journey.

Additionally, I like to give back and Shaw and Partners are passionate in this area. It would be nice one day to give back more to Tamil people who are in need, especially in Sri Lanka, through charities that have been set up by other people.

**Rahulan Rukmanikanthan**
Senior Investment Adviser

T: +61 2 6113 5314 | M: +61 402 310 786 | rahulan.rukman@shawandpartners.com.au

ShawandPartners
Financial Services

*Rahulan Rukmanikanthan is an authorised representative (no. 000406416) of Shaw and Partners Limited AFSL 236048. This article has been prepared without taking into consideration any investor's financial situations, objectives or needs. Accordingly before acting on the advice in this document, if any, you should consider its appropriateness to your financial situation, objectives and needs. Every reasonable effort has been made to ensure the information provided in this document is correct, but we cannot make any representation nor warranty as to the accuracy, completeness or currency of that information. To the extent permissible by law, no responsibility for any errors or misstatements is taken, negligent or otherwise. Shaw or its authorised representatives may also receive fees or brokerage from dealing in financial products, please see Shaw's Financial Services Guide for information about the services offered by Shaw available at http://www.shawandpartners.com.au.*